1973 ஆகஸ்ட் 11]

திருவாவடுதுறை ஆதீனத்தின் கீழுள்ள நிலங்கள்

* 97 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகா, கோடாரங்குளம் இனம் கிராமத்தில், திருவாவடுதுறை ஆதீனம் மேற்பார்வையில் உள்ள மொத்த நஞ்சை, புஞ்சை நிலங்கள் எவ்வளவு?

(இ) ஆதினகர்த்தர், பயிரிடும் விவசாயிகளுக்கு அடையோலை போட்டுக் கொடுத்தது எத்தனை ஏக்கர்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) நஞ்சை நிலங்கள் மொத்தம் 256 ஏக்கர் 33 சென்டு.

புஞ்சை நிலங்கள் மொத்தம் 274 ஏக்கர் 99 சென்டு.

(இ) எல்லா நஞ்சை நிலங்களையும், சாகுபடிக்கு ஏற்ற புஞ்சை நிலங்களையும் தமிழ்நாடு பொறுப்பாவணங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்ட எண் 57/61) குத்தகைப் பத்திரங்கள் மூலம் சாகுபடிதாரர்களுக்கு விடப்பட்டுள்ளன.

திருப்புடைமருதூர் கோயில் நிதி

* 98 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்திலுள்ள கோயில் நிதியிலிருந்து அங்கு ஒரு வைத்தியசாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, இந்தக் கிராமத்தில் கிட்டத்தட்ட ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் எந்த வைத்திய வசதியும் இல்லை. அங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தைச் செய்பவர்கள். எனவே, அந்தக் கோயிலின் நிதியிலிருந்து வைத்தியசாலை அமைப்பதற்கு அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அங்கு சித்த வைத்திய மருத்துவ மனையை ஏற்படுத்த அந்தக் கோயிலின் நிதிநிலையைப்